**செப்டம்பர் - 4**

**"அன்பிலே பயம் இல்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். ஏனென்றால் பயமானது வேதனையுள்ளது." - 1யோவா 4 : 18**

முந்திய அனுபவங்கள் மூலமாகக் கர்த்தரை அறியவும் அவரைக் கண்டுபிடிக்கக் கூடாத இடத்திலும் கூட அவரை நம்புவதற்கும் கற்றுக்கொண்டிருக்கிறவர்களைத் தவிர, மற்றவர்களின் மேல் பயத்தின் செல்வாக்கு உண்மையாகவே பலம் பொருந்தியதாயும், ஏமாற்றுகிறதாயும், பயமுறுத்துகிறதாயும் இருக்கிறது. பயத்தின் நம்பிக்கையின்மையின் ராட்சதனை "என்று எழுதியிருக்கிறதே" என்ற ஆற்றிலிருக்கிற கூழாங்கற்களோடு எதிர்க்க வேண்டும். அந்த எதிராளியை கொல்லத்தக்கதாகவும், அவனுடைய ஆதிக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ளத்தக்கதாகவும், விசுவாசத்தின் கவன் வாக்குத்தத்தத்தின் வார்த்தையை அவ்வளவு பலத்துடனே செலுத்த வேண்டும். இவ்விதமாக தேவனுடைய வார்த்தையாகிய ஆயுதங்கள் மட்டுமே தரிக்கப்பட்டு அவருடைய கோலிலும் தடியிலும் நம்பிக்கை வைத்து நாம் நல்ல தைரியசாலிகளாகிய ஏமாற்றுகிற மதபேத சமயத்துக்கு "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய். நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலருடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" என்று பெலிஸ்தனுக்கு தாவீது சொன்னதுபோல நாமும் சொல்லலாம்.

**- Z ’03, 329 (R 3230)**

அன்பு தேவனில் சந்தோஷப்படுகிறது. தேவனோடு மனவுணர்ச்சி கொள்ளுகிறது. தேவனோடு ஒன்றாயிருப்பதை அது அறிந்திருக்கிறது. அதை உடையவனுடைய இருதயத்தின் ஊடே அது சென்று அவருக்குக் குமாரனாயிருக்கும் நிலையின் ஆவியை உணர்கிறது. இப்படிப்பட்ட அன்பு அவருடைய ஆவி, வார்த்தை, பராமரிப்பு இவைகளின் மூலமாகத் தேவனோடு இருக்கிற ஒரு நெருங்கிய பழக்கத்தின் மேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவரோடு கொண்டுள்ள அதன் ஐக்கியத்தில் அவரை முற்றிலும் நம்பத்தகுந்தவரும், விரும்பக்கூடியவரும், அன்பு கொள்ளக்கூடியவரும் கீழ்ப்படிதலைப் பெறக்கூடியவருமாயிருக்கிறதை அது காண்பிக்கிறது. ஆகையால், ஆள் தன்மையிலும், குணத்திலும், ஏற்பாட்டிலும், கிரியைகளிலும் பிரதானமாயிருக்கிறவராக அவரை வணங்கும் அதே சமயத்தில் அவரிடத்தில் அச்சம் கொள்ளுகிறதில்லை. தேவனைப்பற்றிய அச்சம் அவரிடமுள்ள அன்பை நம்முடைய இருதயங்களிலிருந்து புறம்பே தள்ளிவிடத்தக்கதாக தேவன் சார்பாகத் தடையை உண்டுபண்ணும் அதற்கு மாறாக அவருக்காகவுள்ள அன்பு அவரைப்பற்றிய அப்படிப்பட்ட அச்சத்தை நம்மைவிட்டு நீக்குகிறது. **- P ’30, 151.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**உபா 20:8; நியா 7:3; நீதி 28:1; 29:25; ஏசா 51:12,13; மத் 8:26; 26:69-74; ரோம 8:15; 1கொரி 13:4-7; 2தீமோ 1:7; 1யோவா 4:16,17.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 188 (R 4841).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் பயத்தின் ஆவிக்குப் பலியானேனா? அல்லது பயத்தின் ஆவியை மேற்கொண்டேனா? எப்படி? ஏன்? இந்த அனுபவத்தில் அன்பு என்ன செய்தது?**